**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 -ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No. 95 /2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜப்பன் | தாலுக்கா | : | குத்தாலம் |
| த/க/பெ. | : | சக்கரபாணி | கிராமம் | : | கோனேரிராஜபுரம் |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 55 |

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு விபரங்களை எனது வழக்கறிஞர் யார் சொன்னார் என்றால் நான் தான் சொன்னேன். எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னையும் சேர்த்து மொத்தம் ஆறு நபர்கள் வாரிசுகள் ஆவோம். எனது உடன்பிறந்தவர்கள் அனைவரிடமும் ஒற்றுமையுடன் உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் வயலூரில் உள்ளது. நான் பக்கத்து தெருவில் உள்ள கோனேரிராஜபுரத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்திற்கும் எனது வீட்டிற்கும் எத்தனை இடைவேளை இருக்கும் என்றால் சுமார் 1 கிலோ மீட்டர் இருக்கும். 1 ஆம் பிரதிவாதி என்ன பதில் எழுதி தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞர் கேட்டு தெரிந்தேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் 1 ஆம் பிரதிவாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வருடத்திற்கான அறுவடை முடிந்து விட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கு அருகில் எனக்கு சொந்தமான மற்றொரு சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் அறுவடை முடிந்து விட்டது என்றால் சரிதான். நான் அறுவடை செய்த நெற்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் விற்பனை செய்தேன் என்றால் சரிதான். வெளிநபர்களிடம் நான் விற்பனை செய்வது இல்லை என்றால் சரிதான். தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிப கழகத்தில் விற்பனை செய்ய கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா அடங்கல் பெற்று பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். பதிவு செய்த பின்பு எனது தொலைபேசிக்கு குறுஞ்செய்தி வரும் என்றால் சரிதான். வழக்கு சொத்து புல எண் குறித்து கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா அடங்கல் பெற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் நெற்பயிர் விற்பனை செய்தேனா என்றால் மகசூல் குறைந்து போனதால் மற்றொரு சொத்தான புல எண்.161/5 ல் சேர்த்து வழக்கு சொத்தின் புல எண்ணில் உள்ள நெற்பயிரை விற்பனை செய்தேன். வழக்கு சொத்தை நான் சாகுபடி செய்யவில்லை என்ற காரணத்தினால்தான் சிட்டா அடங்கல் பதிவு செய்யவில்லை என்றாலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் விற்பனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் இந்த வருடம் 10 பைகள் மட்டுமே அறுவடை செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து எத்தனை குழி என்றால் 432 குழி ஆகும். ஒரு பை என்பது எத்தனை கிலோ என்றால் 40 கிலோ ஆகும். நான் மொத்தமாக எத்தனை ஏக்கர் அறுவடை செய்தேன் என்றால் ஐந்து ஏக்கர் அறுவடை செய்தேன். எத்தனை நெற்கள் போட்டேன் என்றால் 150 பைகள் போட்டேன். வழக்கு சொத்தை நான் சாகுபடி செய்யவில்லை என்றாலும் அறுவடை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கு அருகில் புல எண்.60 /2B என்ற சொத்து உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் பெயரில் தற்போது சொத்துக்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பிறகு நான் புல எண்.60 /2B ல் உள்ள சொத்தை எனது பெயருக்கு மோசடியாக பட்டா செய்துக்கொண்டேன் என்றாலும், அது தெரிந்து மற்ற சகோதரர்கள் மனு செய்து அதன்படி அனைத்து வாரிசுகள் பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்ற அனுமதியின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:27:44 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.